2022 மார்ச் 22]

கேட்கிறார். ஏற்கெனவே அவருடைய period*-ல் மரக் கன்றுகளை எப்படிக் காப்பாற்றியிருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை, தமிழ்நாடு முழுவதும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது உள்ள 23.96 சதவிகிதம் என்ற அளவில் இருக்கும் வனப் பரப்பை 33 சதவிகிதமாக உயர்த்துவதற்காக இந்த ஆண்டு மட்டும், ஆரம்ப கட்டம் என்ற நிலையில், இரண்டரை கோடி மரங்களை நடவிருக்கிறோம். அதைத் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு சராசரியாக 32 கோடி மரங்களை நட்டு, வருகிற பத்து ஆண்டுகளில் அதாவது 2030 ஆம் ஆண்டுக்குள் 261 கோடி மரங்களை நட்டு, தமிழகத்தை பசுமை மாநிலமாக ஆக்குவதற்கு உரிய முயற்சிகளை எடுத்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இந்தப் 'பசுமை தமிழகம்' திட்டம் மக்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

குடும்ப அட்டை

***11366—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனி நபர் குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு நபர் தனியாக, எவரையும் சார்ந்திராமல், தனியாக வசித்து சமைத்து உண்டு வருவாராயின் அவருக்கு தனி நபர் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகை குடும்ப அட்டைதாரர்களுக்கு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டப்படி, நபர் ஒருவருக்கு 5 கிலோ அரிசி என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபோதிலும், "அனைவருக்கும் உணவு" என்பதை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு 12 கிலோ அரிசியுடன்,

ஒரு பாக்கெட் பாமாயில், ஒரு கிலோ துவரம் பருப்பு, அரை கிலோ சர்க்கரை மற்றும் எரிவாயு இணைப்பு அடிப்படையில் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்களையும் மானிய விலையில் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. நாளது தேதி வரையில் 19,71,807 ஒரு நபர் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட சாஸ்திரி நகர் பகுதியில் ஒரு நியாய விலைக் கடை வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்திருந்தேன். பொறுப்பேற்றவுடனே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் நியாய விலைக் கடையைத் திறந்து வைத்ததற்காக இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை நான் ஏற்றுக்கொண்டு, மலைபோல் குவியும் மனுக்களை மின்னல் வேகத்தில் நிவர்த்தி செய்துவரும் மனுநீதிச் சோழன் ஆட்சி, நம்முடைய தலைவருடைய ஆட்சி. நம்முடைய கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, குடும்ப அட்டைகள் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட மனுக்கள் எத்தனை? அதில் எவ்வளவு விண்ணப்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தேர்தல் சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதியாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றால், குடும்ப அட்டை வேண்டி யார் விண்ணப்பித்தாலும் தகுதியுள்ள நபர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி பொறுப்பேற்றவுடன், 2021 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 14–3–2022

2022 மார்ச் 22]

வரையிலான 10 மாதங்களில் 15,74,543 விண்ணப்பங்கள் குடும்ப அட்டைகள் வழங்கக் கோரி பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, பின்னர் தகுதியுடைய விண்ணப்பதாரர், இந்த அரசு 10,92,064 புதிய குடும்ப அட்டைகள் வழங்கி சாதனை படைத்திருக்கிறது. அந்தக் குடும்பங்களெல்லாம் இன்றைக்கு மகிழ்ச்சியாக உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில்* POS–Point of Sale *முறையில் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சமீப காலமாக சில புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. கைரேகை பதிகின்றபோது அட்டைதாரர்களுடைய கைரேகைக்கும் இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கைரேகைக்கும் பொருத்தமில்லாமல் இருப்பின், பொருட்களை வாங்குவதற்கு ஒரு தடை ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. எழும்பூர் சட்டப் பேரவைத் தொகுதி, பெரியமேடு பகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளில் இதுபோன்ற பிரச்சினைகள் வந்தன என்பதை அப்பகுதி மக்கள் என்னிடத்தில் தெரிவித்தார்கள். எனவே,* Point of Sale *இயந்திரத்தில் கோளாறு இருக்கிறதா? ஏற்கெனவே ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் வயதானவர்கள், முதியோர்கள் ஆகியோருடைய கைரேகைகள் அழிந்துவிட்டன என்ற ஒரு காரணத்தை அதிகாரிகள் சொல்கிறார்கள். இதுகுறித்து நான் அதிகாரிகளிடத்தில் கேட்டதற்கு, இப்படிப்பட்ட மின்னணு பிரச்சினை மற்றும் தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்டால்,* rural *பகுதியாக இருந்தால் அருகிலிருக்கக்கூடிய* Taluk Supply Officer, *நகரமாக, மாநகரமாக இருந்தால்* Assistant Commissioner *ஆகியோரிடத்தில் சென்று, மனுக்கள் எழுதிக் கொடுத்து, அவர்களிடத்திலிருந்து உத்தரவு பெற்று வந்த பிறகு பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். எனவே, இந்த சிரமத்தைக் குறைப்பதற்கும்,* Point of Sale*-ஐ சரி செய்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் அறிய விரும்புகிறேன். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள்*

சார்பாக ஒரு கோரிக்கை வைக்கிறேன். OAP பெற்றால் குடும்ப அட்டை இரத்தாகுமா என்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. அதையும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள் உண்மையான பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்யும் வண்ணமும், அட்டைதாரர்களுக்கு பெயர்முறை விநியோக வசதி Intra-state portability of family cardholders, அதாவது, ஓர் அட்டைதாரர், தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு நியாய விலைக் கடையிலிருந்தும் பொருட்களைப் பெறும் வசதியை வழங்கும் பொருட்டும், விரல்ரேகை biometric சரிபார்ப்பு முறையில் இன்றியமையாப் பண்டங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில், இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையத்தின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, இன்றியமையாப் பண்டங்கள் விநியோகம் செய்வதில் கடந்த பிப்ரவரி மாதம் 2022–ல் சிறு தடங்கல் நேரிட்டது. அப்போது, தற்காலிகமாக விரல் ரேகை சரிபார்ப்பு முறையை நிறுத்திவிட்டு, அட்டைதாரர்களுக்கு எவ்வித மறுப்புமின்றி இன்றியமையாப் பண்டங்கள் தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டன. தற்சமயம் விரல் ரேகை அங்கீகாரம் தொடர்பான தொழில்நுட்பப் பிரச்சினைகள் அனைத்தும் முழுமையாகச் சரி செய்யப்பட்டு, இன்றியமையாப் பண்டங்கள் விநியோகம் சீராக விரல் ரேகை சரிபார்ப்பு முறை வாயிலாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கைவிரல் ரேகை பதிவாகாத நேரங்களில், குடும்ப அட்டையை scan செய்தோ, குடும்ப அட்டை எண்ணைப் பதிவு செய்தோ பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். கைரேகை இருமுறை சரியாகப் பதிவாகவில்லை என்றால், proxy முறைக்குச் சென்று பொருட்கள் வழங்க ஒப்புதல் வழங்கப்படும். மேலும், நியாய விலைக் கடைகளுக்கு வர இயலாத, தனியாக வசித்து வரும் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர், அவர்தம்

2022 மார்ச் 22]

பிரதிநிதிகள் வாயிலாக இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக் கடைகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக, மாவட்ட வழங்கல் அலுவலர், உதவி ஆணையாளர் (குடிமைப் பொருள் வழங்கல்) ஆகியோர் மூலமாக அங்கீகாரச் சான்று வழங்கப்பட்டு வருகிறது. அங்கீகாரச் சான்று பெற்ற குடும்பத் தலைவரின் பிரதிநிதிகள் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்தம் குடும்பத்தில் 5 வயதிற்கு மேற்பட்டோர் யாராக இருந்தாலும், அவர்கள் அந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், விரல்ரேகை தேய்மானம் காரணமாக விரல் ரேகை சரிபார்ப்பு முறையை செயல்படுத்த இயலாத நேர்வில், அந்தக் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தடையின்றி இன்றியமையாப் பண்டங்களை விநியோகிக்க உரிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. எனவே, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பண்டங்கள் விரல் ரேகை சரிபார்ப்பு முறை மூலமாக எவ்விதப் பிரச்சினைகளுமின்றி சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, முதியோர் ஓய்வூதியத் தொகை OAP *வாங்குகிறவர்களுக்கு குடும்ப அட்டை இரத்து செய்யப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்; அப்படி இல்லை. அவர்களுக்கெல்லாம் அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் அரசாங்கத்தின் மூலமாக பொருட்கள், 5 கிலோ அரிசி ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களுக்கு கைவிரல் ரேகை பதிவு செய்வதில் பிரச்சினை வரும்போது, அவர்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றோர் பகுதிக்கு 5 கி.மீ. தூரம் சென்று உரிய கடிதங்களை அளித்து, அனுமதி பெற்ற பிறகுதான், அவர்களுக்கு மீண்டும் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, அந்தந்தப் பகுதிகளிலேயே உரிய முகாம்களை நடத்த முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுகுறித்து ஏற்கெனவே சொன்னேன். வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கைரேகை பதிய முடியாதவர்கள் ஆகியோர், "நான் இந்தக் கடைக்கு வந்து பொருட்களைப் பெற முடியவில்லை" என்று சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடை ஊழியர்களிடத்தில் தெரிவித்தால், அவர்கள் விண்ணப்பங்களை வழங்குவார்கள், அங்கேயே விண்ணப்பங்கள் இருக்கின்றன. அந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தால், வட்ட வழங்கல் அலுவலர் அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களிடத்தில் அனுமதி வாங்கி, அந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு துறை ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

உதவி செயற்பொறியாளர் அலுவலகம்

***7578—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி கிழக்கு, தெற்கு மற்றும் திருமணி ஆகிய மின் பிரிவு அலுவலகங்களை இணைத்து, விண்ணமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*